தி.மு.க. பொறியாளர் அணி செயலி - புத்தகம் வெளியீடு!

பொறியாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – பரிசளித்து விழாப் பேருரை!

திருவண்ணாமலை, ஆக. 24 -

தி.மு.க. தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு அணிகளுக்கும் ஒரு பணியை வழங்கினார். அதன்படி தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடத்தி அதன் இறுதி விழாவை சென்னையில் நடைபெறவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. தலைவர் ஆணையை ஏற்று தி.மு.க. பொறியாளர் அணி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அப்போட்டி நடத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டு சுமார் 200 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மண்டல வாரியாக அரை இறுதி போட்டியினை மிக பிரம்மாண்டமாக பல்லாயிரக் கணக்கான பொறியியல் மாணவர்கள் முன்னிலையில் நடத்தி அதில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 26 மாணவர்களுக்கு நாளை (25ஆம் தேதி-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில் இறுதி போட்டி நடைபெறவுள்ளது.

இதனை தொடர்ந்து தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நாளை (25.08.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற உள்ளது. இதில் பொறியாளர் அணி செயலி மற்றும் செயல் திட்ட வெளியீட்டு விழா, எஸ்.கே.பி.கருணா எழுதிய "கலைஞர் கட்டிய தமிழ்நாடு" புத்தக வெளியீட்டு விழா, மாநில அளவில் பேச்சுப்போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஆகியவை நடைபெற உள்ளது.

காலை 10 மணியளவில அனைத்து மண்டலங்களிலும் பேச்சுப்போட்டியில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கான இறுதி போட்டி நடக்கிறது. நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை தாங்குகிறார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை எம்.பி. தயாநிதிமாறன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பரிசளித்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

தொடர்ந்து மாலையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு கழக துணை பொதுச் செயலாளரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான க.பொன்முடி தலைமை தாங்குகிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. "கலைஞர் கட்டிய தமிழ்நாடு" புத்தக அறிமுக உரையாற்றுகிறார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறியாளர் அணி செயலி மற்றும் புத்தகத்தை வெளியிட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து விழா பேருரையாற்றுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை! திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி!

அமைச்சர் ஆர்.காந்தி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக.24-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி 25082024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணி அளவில் திருவள்ளூரில் உள்ள எம்.எஸ்.கே திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக் முன்னிலை வகிக்கிறார். நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள். பேச்சுப் போட்டி முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியில் நடுவராக நாஞ்சில் சம்பத், தமிழ் மகன், சிங்கை பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். இதில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைக்கிறார்கள்.

சிறப்பு அழைப்பாளராக எஸ்.ஜோயல், பிரபுகஜேந்திரன் பங்கேற்கிறார்கள். இப்பேச்சுப் போட்டியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.இ.டி.ஆதிசேசன், மாஸ்டர் குருதாஸ், ஒ.ஏ. நாகலிங்கம், வி.சி.ஆர். குமாரன், ஜெயபாரதி, மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், கிஷோர், கே.எம்.சுப்பிரமணி, ராஜேஸ்வரி ரவீந்திரநாத், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தா.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ் குமார், டி.ஆர்.திலீபன், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் தா.கிறிஸ்டி, அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், ப.ஆர்த்தி ரவி, சி.ஜெ.சீனிவாசன், ஜி.ரவீந்திர, பி.டி.சந்திரன், பெ.பழனி, சி.என்.சண்முகம்,

வி.வினோத்குமார், என்.கே. கிருஷ்ணன், எம்.ஜெ. ஜோதிக் குமார், டி.ஆர்.கே.பாபு, ஆர்.ஜெயசீலன் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.